Chundikuli Branch Library

# யுத்தத்தில் இராணுவம் தோல்வியடைந்துவருகிறது

(நமது நிருபர் தேவா)

''போர்மேகங்கள் தற்போது எம்மை சூழ்ந்துள்ளன. போர விமானங்களின் உறுமல்களையும் ஷெல் குண்டு வீச்சுக்களையும் நாம் பொருட்படுத்தாமல் இந்த முத்தமிழ் விழாவை நடாத்துகின்றோம்'' இவ்வாறு முத்தமிழ் விழா

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 38 வைகாசி 25 துல்ஹஜ்தா 24 இதழ் 117

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 8-06-1991

## மன்னார் தாக்குதலில் இராணுவம் நிலைகுலைந்தது

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் முன்னேறிய இராணுவத்தினரை நோக்கி ஆண்டார்செட்டி வெளி என்னும் இடத்தில்வைத்து விடுதலைப் புலிகள் கடும் தாககுதல் மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலையடுத்து இராணுவத்தினர் அவ்விடத்திலேயே நிலைகொண்டுள்ளனர்.

[4ம் பக்கம் பார்க்க]

## குண்டுவெடிப்பு சம்பவத்தில் இந்திய அமைச்சர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்

(புதுடில்லி)

இந்திய தகவல் ஒலிபரப்புத் துறை இராஜாங்க அமைச்சர் திரு. சுபோத்கான் சஹாய் சக்தி வாய்ந்த குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றிலிருந்து தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

(4ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை விவகாரம்:

# கொலையாளிகளை கண்டுபிடிக்க புலிகள் ஒத்துழைக்கத் தயார்

## லண்டன் புலிகள் செயலகம் அறிவிப்பு

(மணிலா)

**முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலையில் ஈடுபட்ட கொலையாளிகளை கண்டுபிடிப்பதில் தாம் ஒத்துழைப்புத்தர தயாராக இருப்பதாக லண்டனிலுள்ள விடுதலைப் புலிகள் செயலகம் தெரிவித்துள்ளது. மேலும் ராஜீவ்காந்தி கொலைசெய்யப்பட்ட சம்பவத்தில் தாம் சம்பந்தப்படவில்லையென மீண்டும் விடுதலைப் புலிகளின் லண்டன் செயலகம் மறுப்பு தெரிவித்துள்ளது.**

இதேவேளையில் சென்னையில் நடைபெற்ற படுகொலைச்சம்பவத்தில் ராஜீவை படுகொலை செய்தததாக நம்பப்படும் பெண்ணின் அருகில் நின்ற வாலிபர் இலங்கைத் தமிழரான மதிமகன் என்று 'த ஸ்டேட்ஸ்மன்' என்னும் இந்திய பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் பொறியியல் படித்தவர் என்றும் தமிழகத்தில் காஞ்சிபுரம் நகரில் வியாபாரம் செய்துவந்தவர் என்றும் அப்பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

ராஜீவை மாலையிட்டு படுகொலைசெய்வதற்கு சற்று நேரத்துக்கு முன்னர் இப்பெண்ணுடன் மதிமகன் பேசிக்கொண்டிருந்தார் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

மேலும் ராஜீவ் படுகொலையில் சம்பத்தப்பட்டோர் பயணம் செய்ய பயன்படுத்திய கார் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. [க]

## கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காகக் கொழும்புக்குச் செல்வதற்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பதிவு செய்துள்ள நோயாளர்களையும், அவர்களுடன் கூடச்செல்லும் உறவினர்களையும் எதிர்வரும் 12-ம்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆங்கில ஆசிரியர் தெரிவு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் ஆங்கில ஆசிரியர்களை சேர்ப்பதற்கான தெரிவுப் பரீட்சை யூலை மாதம் 14ம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 14ம் திகதியாகும். இந்தப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுவோர் மாவட்ட சேவை

(4ம் பக்கம் பார்க்க]

## முத்தமிழ் விழாவையொட்டி யாழ்நகர் களைகட்டுகிறது

[யாழ்ப்பாணம்]

முத்தமிழ்விழாவையொட்டி யாழ். மாநகரம் களைகட்டத் தொடங்கியுள்ளது. ஆறடி உயரம்கொண்ட அரங்கு முற்றவெளி மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

முற்றவெளி சுற்றுடல் பகுதி முழுவதும் துப்பரவாக்கப்பட்டுள்ளது.

முக்கியகேந்திரநிலையங்களில் தமிழர் கலை பண்பாடுகளை பிரதிபலிக்கும் அலங்காரவளைவுகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

நகர் முழுவதும் சிவப்பு, மஞ்சள்நிறங்களினால் சோடனை செய்யப்பட்டுள்ளது. வாழைகள், தோரணங்கள், கமுகுகள் வீதிக்குவீதி நாட்டப்பட்டுவருகின்றன.

எங்கும் புலிக்கொடிகளும், சிவப்பு மஞ்சள் கொடிகளும் பறந்தவண்ணம் உள்ளன.

எதிர்வரும் 13ம், 14ம், 15ம் திகதிகளில் வரலாறு கண்டிராதவகையில் இறுதி நிகழ்ச்சிகள் முற்றவெளி மைதானத்

[4ம் பக்கம் பார்க்க]

## மாமனிதருக்கு விருது

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மண்ணுக்கும் மக்களுக்கும் அளப்பரிய பணியாற்றிய மண்ணின் மைந்தர்களில் இலக்கியம், கலை, போராட்டப் பங்களிப்பு, சாவைமதிக்காத தீரச்செயல் போன்ற பல

[4ம் பக்கம் பார்க்க]

## இரு தமிழ் பெண்கள் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் கடந்த 3ம் திகதி சந்தைக்கு பொருட்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி வேலைகளில் தேக்க நிலை?

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை துறைமுக இறங்குதுறை 2ம் கட்ட அபிவிருத்தி வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட மாட்டாது என்று தெரியவருகிறது.

60 அடி நீளமான பாதை அமைக்கும் திட்டத்தை புனர்வாழ்வு அமைச்சு சிபார்சு செய்து சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் வந்தபின்னர் இந்த வேலைகள் தொடருமென தெரிவிக்கப்படுகிறது. 60 அடி நீளமான பாதையை உருவாக்க 16 லட்சம்ரூபா நிதி தேவைப்படுகிறது. [153]



மானிப்பாயில் நடைபெற்ற முத்தமிழ் விழா முதல்நாள் நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கிய புதுவை இரத்தினதுரை, பேராசிரியர் சிவத்தம்பி, மட்டு-அம்பாறை தளபதி திரு. கருணா ஆகியோர் உரையாற்றுவதை படங்களில் காணலாம். (படங்கள்: தேவா)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பொமேறியன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. சேவ்ரிக்கும் மக்கள் வங்கிக்கும் இடையில். 50, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி 4826)

### தேவை

இரண்டு மாணவர்களுக்கு பரதநாட்டியம் ஆரம்பத்திலிருந்து பயிற்றுவிப்பதற்கு ஆசிரியர் தேவை. 20-6-91ற்கு முன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். சு. செல்வேந்திரன் C/o வே. தங்கம்மா, 'ராஜ்மகால்', அதிகாரி செல்லமுத்து வீதி, மானிப்பாய். (சி 4823)

### தவறிவிட்டது

வேலாயுதம்பிள்ளை திருநாவுக்கரசு என்பவரின் அடையாள அட்டை (332520903 V) 21-5-91ல் புளியங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (சி 4825)

### துர்க்கா மங்கள சேவை

உங்கள் பிள்ளைகளின் எதிர்கால பலாபலன்களை அறிந்து செவ்வாய் பாவக் கிரகதோஷ நிவர்த்தி இலவச ஆலோசனை பெற்று சாந்தி வழிபாட்டுடன் திருமணம் நிறைவேற்றவும், அச்சொட்டாக சாதகம் எழுதவும், பலனை அறியவும். S B. தங்கராஜ், ''துர்க்கா மங்கள சேவை'', 115, முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-4784)

## இராசி பலன்

08-06-1991

சனிக்கிழமை

ஏகாதசி பின்னிரவு 2-34 வரை. ரேவதி பிற்பகல் 4-24 வரை, மரணயோகம், இராகுகாலம காலை 8-52 முதல் 10-22 வரை. சுப நேரம் பகல் 2-52 முதல் மாலை 4-22 வரை. ஏகாதசி விரதம்.

மேடம்; திருமணப் பேச்சுக்கள், தொழிற் சிறப்பு, குடும்ப உறவு.

இடபம்: உடல்நிலை பாதிப்பு பணத் தகராறு, குடும்ப அமைதியின்மை.

மிதுனம்: வாக்கு வன்மை. தொழில் லாபம், சமரச முயற்சி.

கடகம்: இனசன வருகை, தொழிற் சிறப்பு, சுபகாரியச் செலவு.

சிங்கம்: வாக்குக் கலகம், அமைதிக் குறைவு, இடமாற்றம்.

கன்னி: வயிற்றில் ரோகம், பகைவர் தொல்லை, குடும்ப மோதல்.

துலாம்: தொழில் மாற்றம், காரியசித்தி, பணவரவு.

விருச்சிகம்; வைத்தியச் செலவு, கடும்உழைப்பு, சகோதர உதவி.

தனுசு: மனநிலை மாற்றம், பொருளாதார நெருக்கடி, அசதி.

மகரம்: பிரிவுத் துயர், தொழில் நஷ்டம், பணியாள் சகாயம்.

கும்பம்: குடும்ப மகிழ்ச்சி, தானதர்மம், பயணங்களால் நன்மை.

மீனம்: அவசரப் போக்கு, தொழிற் பாதிப்பு, வீண் கவலை;

— ஜோஸ்யர்

## அன்பான வேண்டுகோள்

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் நீதிக்காகவும், அமைதி வாழ்விற்காகவும் ஏங்கி நிற்கின்றனர். இவ்வேளையில் கத்தோலிக்க திருச்சபை சிறப்பாகச் செயற்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர். நாமும் இக்கருத்துடன் ஒன்றிக்கிறோம்,

தத்தமது சொந்தக் கருத்துக்களை எழுதி பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

முகவரி:

**இணைப்பாளர்,**

**கிறிஸ்தவ பொதுநிலையினர் முன்னணி,**

8/1, செல்டன் வீதி,

நாவாந்துறை,

யாழ்ப்பாணம்.

(எ-1340)

## கண்ணீர் அஞ்சலி

### டாக்டர் J. P. C. பிலிப்ஸ் (J. P.)

பற்றீஸியன் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் தலைவரும் (CHAIRMAN) சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சிரேஷ்ட உபதலைவருமாகிய அமரர் டாக்டர் J. P. C. பிலிப்ஸ் J. P. அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இவரின் ஆத்ம சாந்திக்காக 8-6-91 சனிக்கிழமை (இன்று) மாலை 5-00 மணிக்கு புனித பத்திரிசிரியார் கல்லூரி தேவாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்,

பழைய மாணவர்கள், அனுதாபிகள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பற்றீஸியன்
தொழிற்பயிற்சி நிறுவனம்
ஊழியர் நலன்புரிச் சங்கம்

59, சென்பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம். (எ-1364)

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



### பிரம்மஸ்ரீ ப. சுப்ரமண்ய ஐயர் [P. S. ஐயர்]

(இளைப்பாறிய புகையிரத காணி உத்தியோகத்தர்,
நில அளவையாளர்,
யாழ். சிவானந்த குருகுல நிர்வாகஸ்தர்)

**தோற்றம்: 31-8-1922 மறைவு: 8-6-1988**

அன்பின் பிறப்பிடமாய், எங்கள் குடும்ப ஒளிவிளக்காய், பாசத்தின் உறைவிடமாய், செயற்திறன் மிக்கவராய் திகழ்ந்த எம் அன்புத் தெய்வமே! காலம் பல கடந்தாலும் உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டு அகலாது.

65, மானிப்பாய் வீதி, இங்ஙனம்
யாழ்ப்பாணம். (சி4816) குடும்பத்தினர்.

## வகுப்புக்கள் ஆரம்பம்

சுருக்கெழுத்து, தட்டச்சு வகுப்புக்கள் ஆரம்பமாகிறது.

**விண்ணப்ப முடிவு திகதி: 25-6-91**

தொடர்பு;

செயலாளர்
ஞானசம்பந்தர் கலைமன்றம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(சி-4827)

## யாழ். பல்கலைக்கழகம் இலங்கை

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீடத்தில் விலங்கு வேளாண்மைத்துறைக்கு பண்ணை அமைப்பதற்குகந்த கால்நடைகளை வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால்நடைகளை வழங்குவவதற்கான கேள்விப்பத்திரங்கள் அவற்றை வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் கீழ் உள்ள மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டவாறு தேவையான விபரங்களுடன் 19-6-91 காலை 10-00 மணிக்கு முன்னர் பதிவாளர், யாழ்/பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கால்நடைகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்'' என்று குறிப்பிட்டு அனுப்பப்படுதல் வேண்டும்

1. **தூய ஜமுனுபாறி, சானுன் மறி ஆடுகளை வழங்குதல்:**

   யாழ்/குடாநாட்டுப் பகுதியில் இருந்து தூய இன ஜமுனு பாறி, தூய இன சானுன் 08 - 18 மாத வயதிற்கிடைப்பட்ட மறி ஆடுகளை வழங்க விரும்புபவர்கள் வழங்க இருக்கும் ஆடுகளின் எண்ணிக்கை, இனம், ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில் வயது, உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

2. **தூய இன ஜமுனுபாறி, சானுன் கடாய் ஆடுகளைவழங்குதல்:**

   யாழ்/குடா நாட்டுப் பகுதியில் இருந்து (11/2 - 21/2) ஒன்றரை, இரண்டரை வயதிற்கு இடைப்பட்ட தூய இன ஜமுனு பாறி, சானுன்இன விருத்திக்குகந்த கடாய் ஆடுகளை வழங்க விரும்புபவர்கள், வழங்க விரும்பும் ஆடுகளின் இனம், வயது, ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில், எண்ணிக்கை, உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

3. **நாட்டு இன மறி ஆடுகளை வழங்குதல்:**

   இன விருத்திக்காக நாட்டு இனவகை (1-1 1/2) ஒன்று ஒன்றரை வயதிற்கு இடைப்பட்ட மறி ஆடுகள் அதிக எண்ணிக்கையில் தேவைப்படுகின்றன. கிளிநொச்சி பிரதேசத்தில் இருந்து இவ்வின மறி ஆடுகளை வழங்க விரும்புபவர்கள் வழங்க விரும்பும் ஆடுகளின் எண்ணிக்கை, ஒவ்வொன்றினதும் மொத்தநிறை கிலோவில் இனம், உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை விபரங்களை குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்/பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.

### மாதிரிக் கேள்விப் பத்திரம்

1. முழுப் பெயர்:-
2. முகவரி;
   (நேரடியாக வந்து பார்வையிடக்கூடிய முறையில்முகவரியை விபரமாக குறிப்பிடவும்)
3. கால்நடைகள் இருக்கும் இடம்;
   1. கிராமம்
   2. உதவி அரச அதிபர் பிரிவு
   3. மாவட்டம்
4. வழங்க விரும்பும் கால்நடைகளின் விபரமும் கோரும் விலையும்.
   1. இனம்
   2. வயது
   3. எண்ணிக்கை
   4. பாலின் அளவு (லீற்றரில்)
   5. ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில்
   6. உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை
5. மேற்குறிப்பிடப்பட்ட கால்நடைகளை கையளிக்கக் கூடிய இடம். (முகவரி)

கேள்விப்பத்திரங்கள் 19-06-91 10-30காலை மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை மண்டபத்தில் திறக்கப்படும்.

(எ-1363)

# ★ நெருக்கடிக்கு மத்தியிலும் முத்தமிழ் விழா சிறப்புற கிழக்கு மக்கள் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

''கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் தினமும்கொலைசெய்யப் பட்டும், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டும் வருகின்றனர். இப்படியான சூழ்நிலையிலும் கிழக்கு மாகாண மக்கள், முத்தமிழ் விழா சிறப்பாக நடைபெறத் தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள்.''

இவ்வாறு நேற்று முன்தினம் மானிப்பாயில் நடைபெற்ற முத்தமிழ் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத் தளபதி திரு. கருணா கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது; ''அன்று சிங்கள இராணுவம் எமது இருப்பிடங்களை தேடி வந்தது. இன்று நாம் அவர்களின் பாசறைகளைத் தேடிச் சென்று அழித்துவருகின்றோம். அந்தளவுக்குத் தமிழீழப் போராட்டம் மக்களின் ஆதரவுடன் வளர்ந்துவருகின்றது.

''எமது கிழக்கு மாகாணத் தமிழ்மக்கள் தினமும் சிறிலங்கா இராணுவத்தாலும், முஸ்லிம் ஊர்காவற்படையினராலும் சித்திரவதை செய்யப்பட்டும், சொத்துக்கள் சூறையாடப்பட்டும் வருகின்றன.

''எப்படிப்பட்ட அழிவுகள் எமக்கு ஏற்பட்டாலும், தமிழீழத்தையும், விடுதலைப் புலிகளையும் விட்டு எம்மால் வாழ முடியாது'' என்றார். (வி)

# ''தமிழீழமண் படிப்படியாக மீட்கப்பட்டு வருகிறது'' - ராஜன்

(யாழ்ப்பாணம்)

''1974ம் ஆண்டு தமிழாராய்ச்சிமகாநாடு நடைபெறும்போது தமிழ் மக்களைச்சுற்றி ஸ்ரீலங்கா படையினர் நிறுத்தப்பட்டு தமிழ்மக்களின் எழுச்சி சிங்கள ஆட்சியால் நசுக்கப்பட்டது. இன்று முத்தமிழ்விழா நடைபெறும்போது தமிழ் மக்களைச் சுற்றி தமிழ் படை பாதுகாத்து நிற்கின்றது''

இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ராஜன் கூறினார்.

நேற்றுமுன்தினம் மானிப்பாயில் நடைபெற்ற முததமிழ் விழாவில் திரு. ராஜன்மேலும் பேசியதாவது:

''எமது தமிழ்மண் படிப்படியாக மீட்கப்பட்டு வருகின்றது. சோழர் காலத்தில் புலிக்கொடி பறந்ததாக வரலாறு கூறுகின்றது, அதன் பிறகு இன்று தமிழீழம் எங்கும் புலிக்கொடி பறக்கின்றது''.

இன்று நாம் ஒரு தேசிய இனமாக மாறிவிட்டோம். சிங்கள அரசாங்கம் எமக்கு பொருளாதாரத்தடையை ஏற்படுத்திய போதிலும் எமது மக்களின் ஒற்றுமையுடன் அவற்றைத் தகர்த்தெறிந்து விட்டோம். தமிழ்த்தாயின் அடிமை விலங்கு அறுக்கப்படவேண்டுமாகில் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்ட மனதுடன் எமது போராட்டத்துக்கு முழுப்பங்களிப்பையும் அளிக்கவேண்டும்'' என்றார். (வி)

## கொட்டுமுரசே... கொட்டு முரசே..!

—கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்—

கொட்டு முரசே ... கொட்டு முரசே... இன்று
எங்கள் தமிழுக்கு இனிய விழாவென்று
கொட்டு முரசே ... கொட்டு முரசே...!

துட்டரை மண்ணில் துரத்தி அடித்திட — இது...
கட்டியம் கூறும் காவிய விழாவென்று...
கொட்டு முரசே ... கொட்டு முரசே...!

பட்டமும் பதவியும் மட்டுமெம் வாழ்வில்லை...
பண்புத் தமிழுக்குத் தொண்டுகள் புரிவதே...
வாழ்வென்று
கொட்டு முரசே... கொட்டு முரசே!...

விட்டில்கள் போல்நாம் வாழ்ந்தது போதும்;
விடிவினைக் காண... தமிழனை வாழ... தூக்குவோம்
ஆயுதமென்று...
கொட்டு முரசே... கொட்டு முரசே!

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகத்தினர்
நடாத்தும்

முத்தமிழ் விழா

3-ம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: மானிப்பாய், மாவீரர் கலையரங்கம்
நாள்: 08-06-1991 சனிக்கிழமை
பிற்பகல் 5-30 மணி

5-30 — 6-15 மங்கள இசை

நாதஸ்வரம்
திரு. என். கவிதாஸ்
திரு. கே. கிருஷ்ணதாசன்

தவில்
திரு. என். ஆர். சின்னராசா
செல்வன் என். ஆர். எஸ். சுதாகரன்

திறப்புரை
சிறப்புரை: திரு. க. சொக்கலிங்கம் எம். ஏ.

வழக்காடு மன்றம்
வழக்கு: ''நாட்டை இக்கட்டான நிலையில் விட்டு ஓடுவோர் குற்றவாளிகளே''
நீதிபதி: திரு. க. சிவராமலிங்கம் எம். ஏ.

தொடுப்பவர்: திரு. தி. திருநந்தகுமார்
மறுப்பவர்: திரு. ரி. சிவகுமாரன்

கூட்டு வீணையிசை

இசைக் கச்சேரி
திரு. எல். திலகநாயகம் போல் — பாட்டு
திரு. எஸ். வெங்கடேஸ்வரசர்மா — வயலின்
திரு. எஸ். பாலச்சந்திரசர்மா — மிருதங்சம்
திரு. சே. துரைராஜா — கஞ்சிரா

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின்
போர்க்காலப் பாடல்கள் — மெல்லிசை நிகழ்வு

# காங்கிரஸ் வென்றால் சோனியா பிரதமர்?

(புதுடில்லி)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ்கட்சி வெற்றிபெற்றால் திருமதி சோனியா காந்தி பிரதமர் பதவிக்கு தெரிவு செய்யப்படலாமென்று இந்திய அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இதே வேளையில் திருமதி சோனியா காந்தியை காங்கிரஸ் கட்சிக்குள் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த இந்திரா காங்கிரஸ் கட்சியில் பிளவுகள் ஏற்பட்டு அது உடைந்து போவதைத் தடுக்கும் முகமாகவே திருமதி சோனியாவை கட்சிக்குள் இணைத்துக் கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

காங்கிரஸ் வெற்றி பெறும் பட்சத்தில் பிரதமர் பதவிக்கு, கட்சித் தலைவர் பி.வி. நரசிம்மராவ், முன்னாள் உத்தரப்பிரதேச முதல்வர் என். டி திவாரி, மத்திய பிரதேசகாங்கிரஸ் தலைவர் அர்ஜுன் சிங், மஹாராஷ்டிர முதல்வர் சரத் பவார், முன்னாள் குவாலியர் மகாராஜாவின் மகனும் முன்னாள் அமைச்சருமான மாதவராவ்சிந்தியா, திருமதி சோனியா காந்தி ஆகியோரில் எவராவது வரலாம் என்றும் ஊகங்கள் அடிபடுகின்றன.

## பலதும் பத்தும்

### வீரர்கள்!

கடைச் சங்க காலத்தில் தமிழ்மக்கள், ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் வீரர்களாக வாழ்ந்தனர். ''வீரம் செறிந்த தமிழ் நாடு. நோய் காரணமாகப் பிள்ளைகள் இறப்பினும் அல்லது இறந்து பிறப்பினும், அவர்களை வீரர் செல்லும் உலகத்துக்குச் செல்க என்று வாளால் வெட்டிப் புதைப்பார்கள். போரில் வீழ்ந்த வீரரைக் கல்லில் அமைத்து வழிபடுதல் அக்காலத்தில் பெரும் வழக்கமாக இருந்தது. நடுகல் அமைத்து வழிபடும் முறைக்குத் தொல்காப்பியரே இலக்கணம் வகுத்தனர். சங்க காலத் தமிழ்நாடு, வீரத் தாய்மார் வாழ்ந்த ஒரு நாடாகும். வீரத்தின் அணிகலமாக ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் புலிப் பல் கோர்த்து அணிந்தனர்; புலி தாலி அணிந்தனர்; புலித் தோல் போர்த்தனர் அன்று தமிழ்ப் பெண்கள் வீரனையே மணம் செய்ய விரும்பினர். வீரப் பெண்களின் கடமையைச் சங்க காலப் பெண் புலவர் பொன்முடியார், ஒரு வீரத் தாய் பற்றி இப்படிக் கூறினார். ''முதல் நாள் போரில் தனது தமையனை இழந்தாள்; இரண்டாம் நாள் போரில் கணவனை இழந்தாள்; எனினும் கலங்கவில்லை. மூன்றாம் நாள் போருக்குத் தனது பால் மணம் மாறாச் சிறுவனையே அனுப்பி வைத்தாள்'' என்கிறார்.

— ஞாநி

# மன்னிப்புச் சபை உறுப்பினர் வருகிறார்

(கொழும்பு]

சர்வதேச மன்னிப்புச் சபையின் மற்றொரு அங்கத்தவர் விரைவில் இலங்கை வரவிருக்கிறார்.

ஏற்கனவே 2 பேர் கொண்ட குழு ஒன்று கொழும்பு வந்து சேர்ந்துள்ளது தெரிந்ததே.

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பிராந்தியத்தின் ஆய்வுப்பிரிவுத் தலைவர் திரு. டெரெக் அவன்ஸ் இந்தக் குழுவுக்குத் தலைமை வகிக்கிறார்.

## உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த ''இ'' அட்டை வைத்திருப்பவர்களுக்கு இம்மாதம் 10ந்திகதியிலிருந்து இலவச உலர்உணவு ப.நோ கூ. சங்கங்கள் மூலம் வழங்கப்படவிருகிறது.

10ம், 11ம் கட்ட உணவுப் பொருட்கள் ஒரே தடவையில் இவர்களுக்கு விநியோகிக்சப்பவிருக்கிறது. (153)

## மாணவர் நலன் கருதி

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி, மாணவர்களின் வசதி கருதி யூலை மாதம் முதல் தனது வகுப்புக்களை சென்.ஜோன்ஸ் அக்கடமி கட்டடத்திலும் நடாத்தவுள்ளது.

போக்குவரத்துக் காரணங்களை அடுத்தே சென்.ஜோன்ஸ் அக்கடமி கட்டடத்திலும், அங்கு நடைபெறும் சகல தொழில்நுட்பப் பாடங்களும் இங்கு நடத்தச் சகல ஒழுங்குகளும்மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# தகவல் கொடுப்பவருக்கு 10லட்சம் ரூபா சன்மானம்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை பற்றித் தகவல்களைக் கொடுப்பவர்களுக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படுமென இந்திய உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது முன்னர் 5 லட்சம்ரூபா சன்மானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது

கொலைகாரி எனச் சந்தேகிக்கப்படும் பெண் ஒருவரின் படத்தையும் அவருக்கு உடந்தையாக இருந்தவரெனச் சந்தேகிக்கப்படும் பைதமா குப்தா என்பவரின் படத்தையும் இந்திய மத்திய புலனாய்வுத்துறையினர் ஏற்கனவே வெளியிட்டிருந்தனர். (பூ)

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம்
கொக்குவில்.

விசேட அறிவித்தல்

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் நடாத்தவிருக்கும் ஆங்கில தட்டச்சு, தமிழ் தட்டச்சு, தையல் ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பதாரிகள் தங்கள் தகுதியை வெளிப்படுத்திய விண்ணப்பங்களை சங்கப் பணிமனையில் 15-06-91 பி.ப. நான்கு மணிக்கு முன்பாக கையளிக்குமாறு கோருகின்றோம். சம்பள விகிதம் நேர்முகப் பரீட்சையின் பின்னர் தீர்மானிக்கப்படும்.

செல்லையா உருத்திரா
தலைவர்
வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம்.

07-06-91. (சி-4828)

# வீரமணி வீட்டுக்கு தீவைக்க முயற்சி

[சென்னை]

திராவிடர் கழகச் செயலாளர் கி. வீரமணியின் வீட்டுக்கு தீ வைக்க எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

சென்னை அடையாறிலுள்ள அவரது வீட்டைத் தாக்கி சில விஷமிகள் தீவைக்க முயற்சித்தபோது முறியடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது'

# தமிழர் பகுதிகளில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களே

## வடக்கு கிழக்கு யுத்தத்திற்கு காரணம்

(கொழும்பு)

''இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தற்போது நிலவும் யுத்தத்திற்கு அடிப்படைக் காரணம் தமிழர் பகுதிகளில் திட்டமிட்ட ரீதியில் அரசின் ஆதரவுடன் சிங்களவர் குடியமர்த்தப்படுவதே யாகும் என்றும் இப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண விரும்பினால் முதலில் திட்டமிட்ட ரீதியில் நடாத்தப்படும் குடியேற்றப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாகவேண்டும்.''

இவ்வாறு இலங்கையில மனித உரிமைக்காகக் குரல் கொடுக்கும் பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- அம்பாறை, மட்டக்களப்பு, திருமலைப் பகுதிகளில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதும், காணாமல் போவதும், தமக்கு எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் வாழ்வதும் சர்வசாதாரணமாகிவிட்டது.

கிழக்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கில் தமிழ்ப் பொதுமக்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொன்றுகுவிப்பதும், சொந்தக் கிராமங்களிலேயே தமிழ்ப் பொதுமக்கள் அகதிகளாக்கப்படுவதும் அரசின் ஆதரவுடன் திட்டமிட்டு தமிழர் பகுதியில் சிங்களவர் குடியேற்றப்படுவதும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

## முத்தமிழ் விழாவில் இன்று தமிழீழப் பாடகர்களின் போர்க்காலப் பாடல்கள்

(யாழ்ப்பாணம்)

இன்று சனிக்கிழமை மானிப்பாயில் நடைபெறும் மாவீரர் அரங்கில் 'இந்தமண் எங்களின் சொந்த மண்' - 'வேங்கைகளின் விடுதலை வேதங்கள்' - 'பரணி பாடுவோம்' போன்ற ஒலிப்பதிவு நாடாக்களில் பாடிய தமிழீழ மக்களின் அபிமானத்தைப் பெற்ற பாடகர்கள், பாடகியர்களான, சாந்தன், பௌசியன், குலசிங்கம், சியாமளா, மிதிலா, குணமலர், ராதிகா போன்றவர்களும் இந்த ஒலிப்பதிவு நாடாவின் இசை அமைப்பாளர் திரு. கண்ணன் இசைவாத்தியக் கலைஞர்கள் அனைவரும் நேரில் தோன்றி தங்கள் பாடல்களை மக்கள் முன் பாடுகின்றார்கள். எழுச்சியூட்டும் இந்தப் போர்க்காலப் பாடல்கள் இன்று பல்லாயிரக் கணக்கான மக்களின் முன் நடைபெற இருக்கின்றது.

### யுத்தத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஞானம்கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது: ஆயுதப் போராட்டத்தால்தான் தமிழீழத்தை மீட்கமுடியும். அந்நியப்படையெடுப்பால் எமது போராட்டம் சிறிதுகாலம் தடைப்பட்டாலும், தற்போதைய யுத்தத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் அடுத்தடுத்து தோல்வியடைந்து வருகின்றது. விடுதலைப் புலிகளாகிய நாம் வெற்றி வாகை சூடிக்கொண்டே வருகின்றோம்

எமது எல்லைப்பிரதேசங்களில் ஸ்ரீ லங்கா அரசு சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்த முயன்று வரும் போதும், அவை எமது இடைவிடாத தாக்குதல்களால் கைகூடாமல் இருந்து வருகின்றது. சிங்கள அரசு எமக்கு எவ்வளவு இடையூறுகளை ஏற்படுத்தினாலும் எமது மொழி கலை, கலாசாரம் பாதுகாக்கப்பட்டே வரும்'' என்று கூறினார்.

பேராசிரியர் பாலசுந்தரம் சிறப்புரை நிகழ்த்துகையில் கூறியதாவது: ''போர்க்காலங்களில் மக்கள் சோர்வடைந்து உற்சாகம் குன்றாமல், எழுச்சி பெறச்செய்யவே இன்று இந்த முத்தமிழ் விழா நடாத்தப்படுகின்றது. சங்ககாலத்தில், தமிழ் மன்னர்கள் போருக்குச் செல்ல முன்பு விழாக்களை நடாத்தினார்கள் போரில்வெற்றி பெற்ற பின்பும் விழாக்களை நடாத்தினார்கள்.

அதேபோன்று தான் ஈழ மீட்புப் போரில் நாம் வருங்காலத்தில் அடையப்போகும் வெற்றியை மக்களுக்கு எடுத்துக் காட்டவே இந்த முத்தமிழ் விழா நடாத்தப்படுகின்றது என்று கூறினார்.

யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ராஜன் தலைமையில் இச்சிறப்புரை நடைபெற்றது,

2-ம் நாள் நிகழ்ச்சியை வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு ஞானம் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். (வி)

### குண்டு வெடிப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமாலை லுதியானாவில் நடைபெற்ற இச்சம்பவத்தின் போது சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததாகக் கூறப்படுகிறது.

### ஆங்கில ஆசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தின் கீழ் நியமிக்கப் படவுள்ளனர்.

இப்பரீட்சைக்குரிய விபரங்கள் விண்ணப்ப படிவங்களை கொண்ட வர்த்தமானி பிரதியை நல்லூர் பிரதேசசபை கொக்குவில் நூல் நிலையத்தில் (பிறவுண்றோட்) பார்வையிடலாம். [சி]

### கொழும்பு செல்லும்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி புதன்கிழமை யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் அலுவலகத்தில் காலை ஏழு மணிக்குத் தவறாது சமுகமளிக்கும்படி பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நோயாளரை ஏற்றிச்செல்லவுள்ள கப்பலில் 30க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக கொழும்பு செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (56)

### மன்னார்

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

இதேவேளையில் சிலாவத்துறை முகாமிலிருந்து முன்னேறிய இராணுவத்தினரை அகத்திமுறிப்பு சந்தியில் வைத்து விடுதலைப் புலிகள் வழிமறித்து தாக்கினர்.

இச்சம்பவத்தினை தொடர்ந்து 2 குண்டுவீச்சு விமானங்கள், 2 ஹெலிகள் ஆகியவற்றின் உதவியுடன் அகத்திமுறிப்பிலிருந்து இராணுவத்தினர் முன்னேற முயன்றனர்.

இதனபோது விடுதலைப் புலிகளின் ஆர். பி ஜி. தாக்குதலினால் இராணுவ கவசவாகனம் சேதமடைந்தது.

இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கபோராளி றேணு வீரமரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நேற்றுக்காலை பொற்காலை என்னுமிடத்தில் விமானத்தாக்குதல் இடம் பெற்றது. சேதவிபரங்கள் பற்றிய விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. (க)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி63 .ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post office Sri Lanka under license Numbe B/1(0306/ 1

## ஓய்வூதிய அங்கீகாரவேலை யாழ். செயலகத்தில்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் புதிதாக ஓய்வு பெறுபவர்கள் தொடர்பான ஓய்வூதியக் கணிப்பு, ஓய்வூதிய அங்கீகாரம்தொடர்பான வேலைகளை யாழ். செயலகத்தில் இனிமேல் செய்வதற்கு அங்கீகாரம் பெறும் முயற்சி தற்போது நடைபெற்று வருகிறது.

வெகுவிரைவில் கொழும்பு செல்லவிருக்கும் யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இது தொடர்பாக ஓய்வூதியப் பணிப்பாளருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுக்கவிருக்கிறார்.

வடக்கு-கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இவ் வேலைகள் அந்தந்த மாவட்ட செயலகங்களில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (153)

## மக்கள் அஞ்சலிக்கு போராளிகள் புகழுடம்புகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த 6-ம் திகதி மன்னாரில் இராணுவத்துடனான மோதலில் மரணமான வீரவேங்கை றேணு (பீச்ரோட் - யாழ்ப்பாணம் காயமடைந்துவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வீரவேங்கை பவான்[துரைரத்தினம் திவாகரன்] (அளவெட்டி ஆகியோரின் புகழுடம்புகள் இன்று காலை 9 மணி முதல் 10-30 மணி வரை குருநகர் சென். ஜேம்ஸ் பாடசாலையில்மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு விடுதலைப் புலிப் பிரமுகர்களின் அஞ்சலிஉரையை தொடர்ந்து கோப்பாய் மாவீரர் மயானத்தில் போராளிகள் புகழுடம்புகள் தீயுடன் சங்கமமாகும்.

### வீரவணக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்த வீரவேங்கை ரதன் (ஸ்ரீதரன்) நேற்று நடைபெற்ற எதிர்பாராத வெடிவிபத்தில் வீரமரணமடைந்தார்.

விடுதலைப்புலிகள் இவருக்கு தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். [க]

## இந்திராகாங்கிரஸ் பதவிக்குவந்தால் ராஜீவ் அணுகுமுறையிலேயே நடவடிக்கைகள் எடுக்கப்படும்

- அர்ஜுன்சிங்

(சென்னை)

''இந்திரா காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ராஜீவ் காந்தியின் அணுகுமுறை அடிப்படையிலேயே நடவடிக்கைகள் எடுக்கப்படும்.''

இ. காங்கிரஸ் கட்சியின் தலைவர்களிலொருவரான திரு. அர்ஜுன் சிங் நேற்றுச் சென்னையில் பத்திரிகையாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- தேர்தலில் எக்கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்பதில் மக்கள் திட்டவட்டமாக இருக்கவேண்டும். இது ஒன்றே நாட்டின் நலனுக்கு உகந்தது.

நடைபெறும் தேர்தலில் எக்கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை இருக்காது எனக் கூறுவது மக்கள் மீது நம்பிக்கையின்மையைக் காட்டுவதற்கு ஒப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வரும் பட்சத்தில் பிரதமர் பதவிக்குப் போட்டியிடுவோரில் அர்ஜுன் சிங்கும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

### இரு தமிழ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாங்கச்சென்ற இரு தமிழ்ப் பெண்கள் கல்லடியில்வைத்து சிறிலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களுக்கு என்ன நடந்ததென்பதுபற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. [க]

### முத்தமிழ்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தில் நடைபெறுகின்றன.

இறுதிநாள் நிகழ்ச்சியின் பேது பரிசளிப்பு வைபவமும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களின் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன.

சுகாதார வசதிகளை யாழ். மாநகரசபையும், செஞ்சிலுவைச் சங்கத்தினரும் பொறுப்பேற்றுள்ளனர். [56]

### மாமனிதருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறைகளிலிருந்து தெரிவுசெய்யப்படும் மாமனிதர்களுக்கு ஆண்டுதோறும் தமிழீழ தேசியவிருது வழங்குவதை தமிழீழ விடுதலைப் புலிகள் முடிவு செய்திருக்கின்றனர். முத்தமிழ் விழா நிகழ்ச்சியில் இந்த விருது வழங்கப்பட இருக்கின்றது.

இந்தஆண்டு தமிழீழ தேசிய விருது பெறும் மாமனிதர்கள் பற்றிய விபரங்கள் நாளைவெளியிடப்படும்.

## கசினோ சூதாட்டவிடுதிகள் பொலிஸாரால் திடீர் முற்றுகை

[கொழும்பு]

கொழும்பு நகரையும் அதன் சுற்றுப்புறங்களையும் சூழவுள்ள கசினோ என அழைக்கப்படும் சூதாட்ட விடுதிகள் பொலிசாரால் நேற்று திடீர்சோதனையிடப்பட்டன.

இவ்விடுதிகளில் சூதாட்டம் மற்றும் போதைப்பொருள் கடத்தல், பணமோசடி தொடர்பான சமூகவிரோதச் செயல்கள் நடைபெறுவது சம்பந்தமாக பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இவ்விடுதிகள் திடீரென பொலிசாரால் முற்றுகையிடப்பட்டன.

கசினோ சூதாட்ட விடுதிகள் இலங்கையில் இயங்குவது முற்றாக தடைசெய்தல் சம்பந்தமான சட்டமூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்படவுள்ளது தெரிந்ததே. (க)

### சுட்டுக்கொலை

[மட்டக்களப்பு]

தொம்மாந்துறையில் நிலைகொண்டுள்ள ராணுவத்தினர் வந்தாறுமூலையில் நேற்றுமுன்தினம் தமிழர் ஒருவரைசுட்டுக் கொன்றுள்ளனர்.

இராசலிங்கம் என்பவரது வீட்டை சோதனையிட்டு ஒரு பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலி ஒன்றையும் இராணுவத்தினர் அபகரித்துச் சென்றுள்ளனர். (க)

### அமெரிக்க உதவி

(கொழும்பு)

தென் இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரண உதவிக்காக அமெரிக்கா 10 லட்சம் ரூபாவை வழங்கியிருக்கிறது. [க]

## ஜெயலலிதா வீட்டுக்கு தீவிர பாதுகாப்பு

[சென்னை]

அ. தி. மு. க. செயலாளர் செல்வி ஜெயலலிதா கொலை செய்யப்படலாம்என்ற வதந்திகள் பரவலாக உலாவுவதையடுத்து சென்னையிலுள்ள ஜெயலலிதாவின் வீட்டிற்கு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டு பொலிசார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமது பெயர் கொலைப்பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக ஜெயலலிதா அச்சம் தெரிவித்துள்ளதையடுத்து அவரின் பாதுகாப்புபலப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க)